செ.வெ.எண். 33/நவம்பர் தேதி : 15.11.2016

# தருமபுரி மாவட்டம்

## பறவைக் காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.




தருமபுரி மாவட்ட ஆட்சியரக கூடுதல் கூட்டரங்கில் பறவைக் காய்ச்சல் நோய் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரியில் பறவைக் காய்ச்சல் இல்லை என்றும் அது குறித்து மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகிறது. மேலும் அனைத்து கால்நடை உதவி மருத்துவர்களும் தங்கள் பகுதியில் உள்ள கோழிப்பண்ணைகளை தீவிரமாக கண்காணிக்கவும், கோழிப் பண்ணைகளில் உரிய உயிரி பாதுகாப்பு முறைகளை பண்ணை உரிமையாளர்கள் பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தினார்.

மேலும் ஊராட்சித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள் நகராட்சி மற்றும் பேரூராட்சிகள் துறை அலுவலர்கள் தங்கள் பகுதியிலுள்ள கோழி இறைச்சிக் கடைகளில் சுகாதார முறைகள் பின்பற்றுவதையும், இறைச்சிக் கழிவுகள் முறையாக அப்புறப்படுத்துவதையும் தொடர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தினார். மேலும் இது தொடர்பாக கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

கோழிப்பண்ணைகளிலோ, நாட்டுப்புறக் கோழிகளிலோ அசாதாரணமான இறப்பு அதிக அளவில் ஏற்பட்டால் உடன் கால்நடை பராமரிப்புத்துறையையும் மாவட்ட நிர்வாகத்தையும் தொடர்பு கொண்டு தெரியப்படுத்த கோழிப்பண்ணை உரிமையாளர்களையும், பொதுமக்களையும், தற்போது தருமபுரி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் 24 அதிவிரைவு குழுக்கள் தயார் நிலையில் உள்ளது. போதுமான அளவு கிருமி நாசினிகள், மருந்து தெளிப்பான்கள் இருக்கின்றன.

மேலும் அரசுத் துறைகளின் சார்பாக நடத்தப்படும் சிறப்பு முகாம்கள், மக்கள் தொடர்பு முகாம்கள், கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இருவாரத்திற்கு ஒருமுறை மாவட்ட துரித நடவடிக்கைக்குழு கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஆய்வு செய்து அனைத்துத் துறை அலுவலர்களும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து அறிவுரை வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் மரு. எம். ஸ்ரீனிவாசன், உதவி இயக்குநர்கள் மரு. இளங்கோ, மரு. வில்வம், கால்நடை நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குநர் மரு. எஸ். பாபு, இணை இயக்குநர் (ஊரக நலப்பணிகள்) மரு. ஜானகி, துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) மரு. ஜெகதீசன், தருமபுரி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), தருமபுரி, உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்), தருமபுரி, வனத்துறை அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்கள், சுகாதாரப்பணிகள் துறை அலுவலர்கள், பேரூராட்சிகள் துறை அலுவலர்கள், வருவாய்த்துறை அலுவலர்கள், நகராட்சித்துறை அலுவலர்கள் மற்றும் கால்நடை உதவி மருத்துவர்கள் உட்பட பலர் கலந்துக் கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.